புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# பெண்ணுரிமை மீட்டலில் வாஸந்தியின் புதினங்கள்

*பா. சிவசங்கர்,*
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,*
*அண்ணாமலைநகர் – 608 002.*

## முன்னுரை

வாஸந்தி ஓர் எழுத்தாளர். சமூகவியல் சிந்தனை கொண்டவர். பத்திரிகைகளில் பெண்கள் தொடர்பாகச் சிந்திக்கத்தூண்டும் கட்டுரைகளை, கதைகளை எழுதி வருவர். பெண் மையச் சிந்தனைகளை முதன்மைப்படுத்தி பல நாவல்களை எழுதியிருப்பவர். பல்வேறு விருதுகளைப் பெற்றவர். பழமை நிலையிலிருந்து பெண்கள் மீண்டு சுயமதிப்பு பெற்றவர்களாக திகழ வேண்டும் என்பதை வலியுறுத்தக்கூடியவர். நாற்பதிற்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியவர். இவருடைய நாவல்களில் கடைசிவரை, கதவில்லா வீடு ஆகியவற்றில் இடம் பெற்றுள்ள பெண்களை மையமாக வைத்தே இக்கட்டுரை அமைகிறது.

## பெண்ணிய நோக்கம்

பெண்ணியம் அனைத்து வகைப் பெண்களுக்கும் உரிமை வேண்டுவது. பெண்கள் தாம் மேற்கொள்ளும் அனைத்துவகை வாழ்க்கை முறைகளிலும், பணிகள் அனைத்திலும் சம உரிமை உடையவர்களாக இருப்பதை வலியுறுத்துவது. பெண்களின் உரிமையைப் பறித்து அவர்களைக் கட்டுப்படுத்தும் அனைத்தையும் நீக்குதலை வேண்டுகிறது. பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம் உலகளவில் அரசியலிலும், பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றார் சார்லட்பன்ச் என்பவர். மேலும் அவர் பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல. சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும் என்றும் கூறினார்.

## கடைசிவரை நாவலில் மனோகரி

வாஸந்தியின் படைப்புகளில் குறிப்பிடத்தக்க ஒரு படைப்பு கடைசிவரை நாவலாகும். இந்த நாவலில் ஆண் சமூகம் எத்தகைய சமூகத் தகுதி நீலையைப் பெற்றிருக்கிறது? பெண் சமூகம் எப்படி அடிமைச்சமூகமாய் இருந்து வருகிறது என்பதை மையக்கருவாக்கியிருக்கிறார். குடும்பம், பண்ணை இரண்பாந்திர நீலையில் நிறுத்தியிருக்கிறது. ஒரு குடும்பத்தின் அதிகாரம், அதன் தலைமைப் பொறுப்பு எல்லாம் ஆண் அதாவது தந்ைத, கணவன், மகன் ஆகியோரிடமே குவிக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் தந்தையாதிக்கம் என்று பெண்ணியவாதிகள் சாடுகின்றது. குடும்பத்தில் பெண்ணுக்கு எத்தகைய அதிகாரத்தையும் பகிர்ந்து தரவில்லை. அறிவு, ஆற்றல், உழைப்பு ஆகியன கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுவதில்லை. ‘கற்பு’ பெண்ணுக்கு மட்டும் வலியுறுத்தப்படுகிறது. பெண் குழந்தையை ஆரோக்கியமாக வளர்ப்பதை இந்த சமூகம் விரும்புவதில்லை. வறுமையைக் காரணம் காட்டி, பெண் சிசுக்கொலை தொடர்ந்து நடைபெறும் அவலம். இன்றைய நிலையில் பெற்றோர் இறந்துபோனால் ஆண் வாரிசுதான் கொள்ளி வைக்க வேண்டும். கட்டாயம் ஒரு பெண் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற மரபு சார்ந்த கருத்தாக்கங்கள் இந்த நாவலில் கதைப்போக்கினூடே சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மூலம் காலந்தோறும் பெண்ணின் சமூக அந்தஸ்து குறைத்து மதிப்பிடப்படுவதை உணர்ந்து

கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட சிந்தனைகள் வாஸந்தியின் "கடைசிவரையில் " அதிகம் பேசப்பட்டுள்ளன. இதன் மையக் கதாபாத்திரம் மனோகரி. மனோகரி மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். தன் கொள்கைக்காக காதலைத் துறக்கின்றாள். பெண் சிசுக்கொலை கூடாது என்பதற்காக கருக்கலைப்பு ஏற்கும் பெண்களுக்கு மனோகரி பெரிதும் உதவியாக இருப்பவள் "கிலி பிடித்தாற்போல் தொந்த அந்தப் பெண்ணை மெள்ளப் பேச்சு கொடுத்து நிதானப்படுத்தினேன். பெயர்? ரஞ்சிதம். வயது? முப்பது இருக்கும். இது எத்தினாவது பிரசவம்? ஆறாவது மூத்தது எல்லாம் இருக்கா? மூணு இருக்குதுங்க. பொட்டைப்புள்ளைங்க. மற்ற இரண்டு என்ன ஆயிற்று என்று கேட்காமல் அவளுடைய சோகை பிடித்த கண்களை ஆராய்ந்தேன். இப்ப எத்தினி மாசம்? ஆறுங்க. திடீரென்று என் கைகளை அந்தப் பெண் இறுக்கிப் பிடித்துக்காண்டாள்.

டாக்டரம்மா நீங்கதான் என்னைக் காப்பாத்தோணுங்க அவர் கண்களில் தெரிந்த மீதி எனக்குப் பழக்கமானது ஆனால் அதைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குள் ஏற்படும் அதிர்வு இப்பவும் ஏற்பட்டது. – (வாஸந்தி கடைசி வரை, ப.11)

காலங்காலமாக, பெண் பிறப்பு அவமதிக்கப்பட்டு வருவதற்கான ஒரு சான்றாக இந்தக் கதாப்பாத்திரத்தை ஆசிரியர் காட்சிப்படுத்தி இருக்கிறார். பெண்களுக்குக் வேணும் சிந்தனைவாதிகள் ஆதாத்திருக்கிறார்கள். ஆனால், பெண் கலவியின் அவசியத்தைப் பெண் உணரவில்லை கல்வி என்பதை ஆண் சமூகச் என்பதை மனோகரியின் அம்மாவும் நீரூபித்திருக்கிறாள். "காலேஜ்லே சேரத்தான் போறேன்"என்று நான் எனது பதினேழாவது வயதில் சமையல் கட்புல் தோசையை சாப்பிட்டபடி சொன்னபோது அம்மா அது ஏதோ ஹாஸ்யம் போலச் சிரித்தாள். மிகச் சுலபமாக முடித்திருக்கவேண்டிய நான் போராடும்படியாக ஏற்படுத்திய பாட்டியையும் அதற்கு ஒத்து ஊதிய அம்மாவையும் நினைத்தால் இதனாலேயே இன்னமும் ஆத்திரம் வருகிறது - கடைசிவரை ப.21). காலந்தோறும் பெண் கல்வி பெறுவது என்பது பலதடைகளைத் தாண்டிய பிறகுதான் சாத்தியமாகிறது என்பதை மனோகரி பாத்திரமும் உணர்த்துகிறது. சுயச்சார்புடையவர்கள் சமூகப்பணபாடு என்று காட்டப்பட்டுள்ள புனிதங்களை எதிர்த்து நிற்கும் திராணிகொண்டவர்கள் என்பதன் காட்சிதான் மனோகரி.

தந்தை, தாய் இறந்தால் ஆண்தான் கொள்ளி வைக்கவேண்டும் என்ற பண்பாட்டையும் எதிர்க்கிறாள். "மகதான் கொள்ளி வைக்கணும்னு ஐயாவுக்கு விருப்பம். எழுதி வெச்சிட்டுப் போயிருக்காங்கக என்றார் தணிகாசலம். கையில் திப்பந்தத்தைப் பிடித்து அப்பாவின் சிதைக்கு தி வைத்தபோது அந்த ஊரில் அதுவரை எந்தப் பெண்ணுமே செய்திராத வேலையை நான் செய்தது பெரிய வற்றி என்று தோன்றவில்லை" (கடைசிவரை, ப.132). மரபையும் புதுமையையும் சமூக விமர்சனப் பார்வையோடு வாஸந்தி மனோகரியைப் படைத்திருப்பது பெண்ணிய வாசிப்பின் அனுபவத்தின் மூலம் உணர்ந்துகொள்ளலாம்.

கதவில்லா வீடு நாவலில் மேரி

வாஸந்தியின் மற்றொரு படைப்பு கதவில்லா வீடு. சமூகத்தில் தான் மட்டும் சிறப்பாக வாழவேண்டும் என்று நினைக்கும் மக்கள் ஒருபுறம். தன்னைச் சுற்றி இருப்பவர்கள் படும் துன்பத்தை தன் துன்பமாக நினைத்து வருந்தி, துன்பத்தை துடைப்பது மற்றாரு புறம். பெண்கள் தம் இயல்பான உணர்வுகளை மென்மையாகப் பிரதிபலித்துக் காட்டுவதே பெண்ணியம். பழந்தமிழ்ப் பண்பாட்டின் நிலைக்களனாய் திகழ்பவள் பெண். பாரம்பரிய வேர்களை மறந்து விடாமல் தன் கடமைகளை, குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் புரிந்து வாழும் மென்மையான குணங்களை உடையவள் பெண். ஆனால் மாறமுடியாத மரபு எல்லைகள், மாறிவரும் காலப்போக்கிகள் இரண்டிற்கும் இடையில் இன்றைய பெண்மை தவிக்கிறது. சிலர் பாரம்பாய மரபுப்படி முடிவெடுக்கின்றனர். சிலர் மாறிவரும் காலச் சூழ்நிலைக்கேற்ப தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்கின்றனர். "பெண்ணியம் உலக அளவில் பெண்களுக்கு எதிரான தாக்குதல்களை அந்தந்த மண்சார்ந்த கனப்பாமாணங்களோடு பார்க்கப்படவேண்டும் என்பதை மையப்படுத்துகின்றது. ஏனென்றால் பெண்ணியத்திற்கென்று ஒரு பொதுவான வரையறை வகுக்கப்படவில்லை. ஆயினும் குடும்ப சமூக இயங்குதனங்களில் பெண்களின் உணர்வுகள் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். தந்தையாதிக்க வரலாறு மாற்றம் பெறவேண்டும். பெண் மீதான ஆணாதிக்க மரபுகள், மதிப்பீடுகள், மாற்றுருவாக்கம் பெறவேண்டும் என்பதே பெண்ணியமாகக் கருதப்படுகின்றது. " (அரங்கமல்லிகா. பெண்ணியமும் தலித்தியமும் ப.40)

*பெண்கள் வாழ்வதற்குரிய சூழ்நிலையை நாமே சிலநேரங்களில் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதை கதவில்லாத வீடு வலியுறுத்துகிறது.*

*தன்னலமற்ற செவிலிப்பெண் மேரி*

*செவிலிப் பெண்ணாக மருத்துவமனையில் பணியாற்றி வருபவள் மேரி. கணவனை இழந்தவள். ஒரே மகனும் வெளிநாட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறான். தன்னைச் சுற்றி பெண்கள் படும் துயரத்திற்கு வருத்தப்படுபவள். மருத்துவமனையில் ஓய்வின்றி உழைப்பவள். வெளியூரில் மருத்துவ முகாமிற்கு செல்லும்போதும் அங்கே நோயால் அவதிப்படும் பெண்களுக்கு இரக்கம் கொண்டு உணவு, மருந்து, இருப்பிடம் கொடுத்து உதவுபவள். தன்னுடன் பணியாற்றும் பெண்களுக்கு ஏற்படும் குடும்பப் பிரச்சனைகளைக் கண்டு மனம் கலங்குபவள், இறைவனிடம் மனம் உருக வேண்டிக்கொள்பவள்.*

*மேரிப்பற்றிய கருத்தை "டாக்பர் தன்னை மதர் தெரஸா என்று பாகாசம் செய்தது ஞாபத்துக்கு வந்தது. இங்கு எல்லாரும் அவளை அப்படித்தான் அழைக்கிறார்கள். அவள் என்னவோ பரோபகாரத்துக்காகவே பிறவி எடுத்திருப்பதாக அவளுக்குச் சிறப்பு வந்தது. அவள் எதையம் சாதித்ததில்லை. யாருடைய வாழ்க்கையையும் தலையெழுத்தையம் இதுவரை மாற்ற முடிந்ததில்லை. அவள் போகும் இடங்களிலலல்லாம் காணும் ஏழ்மையையும் அதனால் ஜனங்கள் படும் கஷ்டத்தையும் கண்டு பச்சாதாப்படுவது கூட இப்பொழுது ஓர் அபூர்வமான குணமாகிப் போய்விட்டது போலிருக்கிறது. அனுதாபப்படுவதற்கு மேல் அவளால் எதையும் செய்ய முடியவில்லை. உடம்புக் கோளாறென்றால் கிளினிக்கிலேயே பார்க்கக் கூடியவற்றை அவளே பார்த்து மருந்து கொடுப்பாள். இல்லாவிட்டால் வசதி இல்லாதவர்களைக் கட்டாயப்படுத்தித் தான் இன்ஸ்பெக்ஷன் வானில் ஏற்றி அழைத்து வருவாள். இந்த ஆஸ்பத்திரிக்காரர்களுக்கு அவளைக் கடந்த முப்பது வருஷங்களாகத் தெரியுமாதலால் இதுவரை அவளுடைய அதிகப் பிரசங்கித்தனங்களுக்கு எதுவும் சொன்னதில்லை" (கதவில்லாத வீடு, ப.33)*

*என்று ஆசிரியர் கூறும்போது தனக்காக எதனையும் செய்ததில்லை, என்? சிந்தனை கூட செய்ததில்லை மேரி இறுதியில் தன் மகனுடன் சென்று நிரந்தரமாக தங்க நினைக்கின்றாள். ஆனால் அந்த முடிவும் ஒரு அபலைப்பெண்ணின் வாழ்வை மாற்றுவதற்காக மாற்றம் அடைகிறது.*

*கட்டுத் தளைகளின்றும் விடுப்பட்டுச் செயற்படும் பெண்கள்*

*கல்வி வாய்ப்புகளும், வேலைவாய்ப்புகளும் மிகுந்துவரும் இந்நாளில் கட்டுத்தளைகளின்றும் விடுப்பட்டுச் செயலபடும் பெண்களையும் ஆசிரியர் படைத்துள்ளார். சாந்தா செவிலியாகப் பணியாற்றும் போது கிருஷ்ணகுமாரை காதலித்து திருமணம் செய்கிறாள். சாந்தா தன் திறமையால் பல உயர்பதவியினைப் பெற்று வெளிநாட்டில் வேலை செய்ய நீர்வாகம் பரிந்துரை செய்து அனுப்பி வைக்கின்றது. நன்றாக சம்பாதித்து தன் வாழக்கையை வளமாக்க நினைத்து, அங்கே சென்று உழைக்கின்றாள். ஆனால் கணவனோ இங்கே செவிலிப்படிப்பு படிக்கும் மாலதி என்ற பெண்ணுடன் பழகி வருகிறான். அவனுக்கு விபத்து ஏற்படுகிறது. சாந்தா வெளிநாட்டிலிருந்து வந்து கணவனை கவனித்து வருகிறாள். கணவனைப் பற்றிய தகுகவல்களை மேரி சாந்தாவிடம் கூறுகிறாள். இவள் அனுப்பிய பணமும் சரிவர சேமிக்கப்படவில்லை. அவள் கேட்டதற்கு சாந்தா மீது தவறான வழியில் பழி போடுகிறான். அவள் அவனை விட்டு நிரந்தரமாக பிரிய முடிவெடுக்கிறாள். "இப்படி நேர்ந்துடக் கூடாதேன்னு நான் ரொம்பக் கவலைப்பட்டுக்கிட்டிருந்தேண்டி சாந்தா! சாந்தா தலையைக் குனிந்து கொண்டாள். எனக்கும் வருத்தமாகத்தான் இருக்குக்கா. தோத்துப் போனேன்னு பகிரங்கமாய்ச் சொல்ற மாதிரி இருக்கு. ஆனா தோத்துப் போனாலும் போகலாம், ஏமாந்து மட்டும் போகக் கூடாதுக்கா. ஒரு பொம்பளையை எப்படி வேணா ஏமாத்தலாம்ங்கற அவருடைய திமிர்னாலே நான் ஏமாறக்கூடாது. பொம்பளையை அழ வச்சு ஏமாத்தலாம்னு அவருக்கு எண்ணம். நான் அழற பொம்பளை இல்லேன்னு அவருக்குக் காண்பிக்கப் போறேன். அவர் மாறல்லேங்கறதுக்காக நான் மாறாம இருக்க மாட்டேன ". (கதவில்லாத வீடு, பக்.135-136) என்பதின் மூலம் பெண்கள் தங்கள் முடிவை தாங்களே தோந்தெடுத்து கொள்கின்றன.*

*இந்நாவலில் மற்றொரு பெண் மீரா. செவிலிப்பெண்ணாக மேரியுடன் மருத்துவமனையில் பணியாற்றி வருகிறாள். பெற்றோர் இவளுடைய வருமானத்திற்காக*

இவளுக்கு திருமணம் செய்து வைக்காமல் தாமதித்து வந்தனர். இதனை அறிந்து, வரதட்சனைக்கு ஒப்புக்கொண்டு திருமணம் செய்கிறாள். திருமணம் முடிந்த பத்து மாதத்தில் இவளுடைய வாழ்க்கை அஸ்தமனமாகிறது. இதில் அந்த பந்தத்தின் உறவை வளர்ப்பதற்கு கருவுற்றுவிடுகிறாள். இருந்தாலும் பிரிந்து வாழ முடிவு செயது, பிறக்கும் குந்தையை தானே வளர்ப்பதற்கு தயாராகிறாள். ஆனால் அந்த குழந்தை வயிற்றில் இறந்து விடுகிறது. இவளின் திருமண உறவு நிரந்தரமாக முறிந்து, தன் வாழ்க்கையை தனித்து வாழ முடிவெடுக்கின்றாள். பெண்கள், சமூகத்தைப் பார்க்காமல் தன் வாழ்க்கையின் முடிவுகளை தாங்களே எடுக்கும் நிலையில் வளர்ந்திருப்பது மீராவின் மூலம் அறியலாம்.

பிற பெண்கள்

'கதவில்லா வீடு' நாவலில் வரும் சரஸ்வதி என்ற பெண் மாமனால் ஏமாற்றப்பட்டு விபச்சாரத்திற்கு தள்ளப்படுகிறாள். சுந்தரி கணவனை இழந்து மூன்று குழந்தைகளுடன் தகப்பன் வீட்டில் பீடி சுற்றி இரண்டு வேளை உணவிற்காக வாழ்க்கையைப் போராடி வருகிறாள். அவளுக்கு காசநோய் பற்றிக் கொள்கிறது. மேரி உதவி செய்வதாக கூறினாலும் அதற்கும் மறுத்து விடுகிறாள். தன் குழந்தைகளின் உணவிற்காக தன் நோயினை சரிசெய்ய மறுக்கிறாள்.

"உனக்கு மருந்தும் கொடுத்தும் சோறும் போடறேறங்கறாங்க அக்கா! என்று மீரா படபடத்தாள். அவங்க வீட்டிலே வேலையும் ஒண்ணும் கிடையாது. உனக்கு ஓய்வுதான் உதவனும்னே அக்கா சொல்றாங்க. அது உனக்குக் கசக்குதா? சுந்தர் தலையை நிமிரவில்லை. அக்கா நல்லதுக்குத்தான் சொல்றாங்க தெரியுது. ஆனா எப்படிக்கா வீட்டை விட்டு வருவேன்? மூணு பிள்ளைங்களைப் பார்த்துக்கணும். எல்லாரும் உட்கார்ந்து பீடி சுத்தினால்தான் கொஞ்சமாவது அன்னாடம் கூலி கிடைக்கும். அப்பாவுக்கு அடுத்தபடியா நான்தான் அதிகமாச் சுத்தறவள். நான் வந்துவிட்டால் எல்லாரும் பட்டினி கிடக்க வேண்டியதுதான் " (கதவில்லா வீடு. ப.8) என்று கூறி, நோய்க்கு தன்னை இரையாக்கிக் கொண்டாள். இதற்கு காரணம் ஏழ்மை. பெண்களுக்கு கல்வி என்பது அவசியம் என்பதனை உணர்த்தும் பாத்திரமாக ஜெயா என்பவள் மூலம் அறிந்து கொள்ள முடிவும். ஜெயாவின் அக்கா சீதா மனநோயாளி அதன் காரணமாக தன் திருமணம் தடைபடுகிறது என்று எண்ணி தற்கொலைக்கு முயலகிறாள். செவிலி மேரி அறிவுரை கூறுகிறாள். செவிலிப் படிப்பினை தான் படிக்க வைப்பதாக கூறுகிறாள். ஜெயாவின் தந்தை அதற்கு மறுத்துவிடுகிறார். இறுதியில் சீதாவின் இறப்பிற்கு பிறகு ஜெயா தன் முடிவை மாற்றி, தான் கல்வி கற்று சுய மதிப்புடன் வாழ வேண்டும் என்று வீட்டை விட்டு வெளியே வந்து, மேரியிடம் அடைக்கலமடைகிறாள். "சத்தியமாய்ச் சொல்றேன் ஸிஸ்டர். நான் நாஸிங் படிச்சு என் வாழ்க்கையை அமைச்சுக்கறேன். உங்க பேச்சை அப்பவே கேட்டிருந்தால் இந்தக் குளறுபடியெல்லாம் ஆகியிருக்காது. எங்க அப்பாவுடைய பேச்சைக்கேட்டு நானும் முட்டாள்தனமா நடந்துக்கிட்டேன். உங்களை விட்டால் எனக்கு உதவிட யாருமில்லை. அவள் பேச்சுக்கிடையில் அழுது கொண்டே இருந்தாள்." (கதவில்லா வீடு. ப.14)

மேலும் "எனக்கு இப்ப நீங்கதான் ஆண்டவன் ஸிஸ்டர். எனக்கு சந்தாப்பம் கொடுங்க. வாழ்க்கையை மாத்திக்கும் படியா." (கதவில்லா வீடு, ப.143). தன்னை மாற்றி, தன் வாழ்க்கையையும் பெண்களே மாற்றிக்கொள்ளும் சிந்தனை வளர்ந்துள்ளது.

முடிவுரை

கடைசி வரை, கதவில்லா வீடு ஆகிய இரு நாவல்களிலும் பெண்கள் மரபு மாற்றத்தை கொண்டுவர முயல்கின்றனர். பெண்கள் சமூக கட்டுக்குள் அடங்கிவிடாமல், தன்னெழுச்சியாக புதிய பரிமாணங்களுடன் வெளிவர துடிப்பை ஆசிரியர் தாம் படைத்த பெண்களின் மூலம் சமூகத்திற்கு வலியுறுத்தியுள்ளார்.

துணைநூற்பட்டியல்


1. வாஸந்தி, கடைசி வரை, முதல் பதிப்பு - 1996.
2. வாஸந்தி, காலம், முதல் பதிப்பு – 1996.
3. வாஸந்தி, கதவில்லா வீடு, முதல் பதிப்பு – 2009.
4. வாஸந்தி, பெண்ணியமும் தலித்தியமும், முதல் பதிப்பு – 2008.


********* ********* ********** ********* ********* ********** ********** **********